**ஜூலை – 08**

# TNPSC துளிகள்

- தலைமைத் தளபதி உபேந்திர திவேதிக்கு பிறகு, ராணுவத் தலைமைத் தளபதியாக (COAS) ஜெனரல் தீரஜ் சேத் 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று 31வது ராணுவத் தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றார்.
- இந்தியாவின் முதல் தனியார் சுற்றுப்பாதை ஏவுகணையான விக்ரம்-1 இன் முதல் சோதனை ஓட்டமான ஆகமன் திட்டத்திற்கான (Mission Aagaman) ஏவுதல் சாளரத்தை ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் (Skyroot Aerospace) நிறுவனம் அறிவித்துள்ளது.
  - விக்ரம்-1 என்பது 450 கி.மீ உயரத்தில் உள்ள தாழ் புவி சுற்றுப்பாதையில் (LEO) 350 கிலோ வரையிலான சுமைகளை நிலைநிறுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல கட்ட ஏவுதல் வாகனமாகும்.
- ஜப்பானின் மிட்சுபிஷி கேஸ் கெமிக்கல் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 100,000 டன் பசுமை மெத்தனாலை வழங்குவதற்கான இந்தியாவின் முதல் நீண்ட கால உலகளாவிய ஒப்பந்தத்தில் ஆக்மி கிரீன் மாலிகியூல்ஸ் பிசினஸ் என்ற நிறுவனம் கையெழுத்திட்டது.
  - பசுமை மெத்தனால் என்பது புதுப்பிக்கத்தக்க மூலப்பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் குறைந்த கார்பன் எரிபொருளாகும் என்பதுடன் மேலும் இது தொழில் துறைகள் மற்றும் கடல்சார் போக்குவரத்தில் பயன்படுத்தப் படுகிறது.
- புண்டிபுக்யோ எபோலா வைரஸுக்கான முதல் மூலக்கூறு நோயறிதல் பரிசோதனையை உலக சுகாதார அமைப்பு (WHO) அதன் அவசரகாலப் பயன்பாட்டுப் பட்டியலில் (EUL) சேர்த்துள்ளது.
  - புண்டிபுக்யோ எபோலா வைரஸ் என்பது எபோலா வைரஸ் நோயை (EVD) ஏற்படுத்தும் இனங்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது மிகவும் பொதுவான ஜைர் எபோலா வைரஸிலிருந்து வேறுபடுகிறது.
- விலங்குகள் மற்றும் மனிதர்களிடையே பரவும் நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 6 அன்று உலக விலங்கினிருந்து மனிதருக்குப் பரவும் நோய்கள் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "One World, One Health: Prevent Zoonoses" என்பது ஆகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பிச்சாவரம் மாங்குரோவ் காடுகளில் தேனீ வளர்ப்பு


- இருளர் பழங்குடியின சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, கடலூரில் உள்ள பிச்சாவரம் சதுப்பு நிலங்களில் தேனீ வளர்ப்பு முன்னெடுப்பைத் தமிழ்நாடு வனத்துறை தொடங்கியுள்ளது.
- இது பருவநிலை நெகிழ்வுத்தன்மை கொண்ட கிராமம் (CRV) முன்னெடுப்பின் கீழ், சூழலியல் சுற்றுலா மேலாண்மைக் குழுவின் (ETMC) மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டத்திற்கு TRIBES திட்டத்தின் கீழ் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) ₹25.37 லட்சம் நிதியுதவி அளித்துள்ளது.
- இத்திட்டம் "பிச்சாவரம் மாங்குரோவ் தேன்" என்ற வணிகப் பெயரின் கீழ் அறிவியல்

பூர்வமான தேனீ வளர்ப்பு, தேன் பதப்படுத்துதல், தரக்குறியீடு செய்தல் மற்றும் சந்தைப் படுத்துதல் ஆகிய பயிற்சிகளை உள்ளடக்கியது.

- இந்த முன்னெடுப்பானது மகரந்தச் சேர்க்கையை அதிகரிக்கும், இயற்கையான சதுப்புநில மீளுருவாக்கத்திற்கு ஆதரவளிக்கும், பல்லுயிரினத்தை வலுப்படுத்தும் மற்றும் ராம்சார் பட்டியலில் உள்ள பிச்சாவரம் சதுப்புநிலச் சூழலமைப்பின் சுற்றுச் சூழல் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## பிடாரி ஏகவீரி கல்வெட்டு




- திருவலஞ்சுழியில் உள்ள சடைமுடிநாதர் கோவிலில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு, பிடாரி ஏகவீரி அம்மனுக்கு சோழர் கால அரச மானியம் வழங்கப்பட்டதை வெளிப்படுத்தியுள்ளது.
- முதலாம் ராஜராஜனின் அத்தையான குந்தணன் அமுதவல்லியார், அம்மனுக்கு அவபால அஞ்சனை சடங்கை ஆதரிக்க 40 பொற்காசுகளை நன்கொடையாக வழங்கியதாக கல்வெட்டு கூறுகிறது.
- இந்த அறக்கட்டளை கோவிலின் விளக்குகள் மற்றும் காணிக்கைகளுக்காக ஆறு பிராமணர்கள் மூலம் ஆண்டு வட்டியாக 30 கலம் நெல்லை வழங்கியது.

- இரண்டாம் ராஜேந்திரனின் ஆட்சியின் போது, தடையற்ற வழிபாட்டை உறுதி செய்யும் வகையில், ஆண்டுக்கு 15 கலம் நெல் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த அறக்கட்டளை தொடரப் பட்டது.
- இக்கல்வெட்டானது கோவில்களை ஆதரிப்பதற்கும், மத மரபுகளைப் பாதுகாப்பதற்கும் அரச அறக்கட்டளைகளைப் பயன்படுத்தும் சோழர்களின் நடைமுறையை எடுத்துக்காட்டுகிறது.

# தேசியச் செய்திகள்

## மாற்றியமைக்கப்பட்ட உதான் திட்டம்

- 2026-27 முதல் 2035-36 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ₹28,840 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்பட்ட உதான் (Ude Desh ka Aam Nagrik - UDAN) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போதுள்ள 100 விமான ஓடுதளங்களை உதான் விமான நிலையங்களாக மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய விமான இணைப்பை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளில் 200 நவீன ஹெலிபேடுகளை அமைப்பதற்கும் இது முன்மொழிகிறது.
- பிராந்திய விமான இயக்கத்தை மேம்படுத்துவதற்காக, விமான நிறுவனங்களுக்கான சாத்தியக்கூறு இடைவெளி நிதியுதவி (VGF) ஆதரவானது 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ஆத்மநிர்பார் பாரத் முன்னெடுப்பின் கீழ், HAL (Hindustan Aeronautics Limited) துருவ் மற்றும் டோர்னியர் விமானங்கள் உட்பட உள்நாட்டு விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களின் பயன்பாட்டை இத்திட்டம் ஊக்குவிக்கிறது.




## LokOS - மக்கள் இயங்குதளம்

- சுயஉதவிக் குழுக்கள் (SHGs) மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளின் (CBOs)

முழுமையான டிஜிட்டல் மயமாக்கலுக்கான டிஜிட்டல் தளமான LokOS-ஐ (மக்கள் இயங்குதளம்) மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- வெளிப்படைத்தன்மை, நிதி உள்ளடக்கம் மற்றும் ஊரக ஆளுகையை மேம்படுத்தும் நோக்கில் DAY-NRLM (தீனதயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்) திட்டத்தின் கீழ் LokOS செயல்படுத்தப்படுகிறது.
- இந்தத் தளம் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பதிவுகள், சேமிப்புகள், கடன்கள், திருப்பிச் செலுத்துதல்கள், நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் வாழ்வாதார விவரங்களை டிஜிட்டல் மயமாக்குகிறது.
- இது ஆதார் மற்றும் வங்கியுடன் இணைக்கப்பட்ட டிஜிட்டல் அடையாளங்கள், நிகழ் நேரப் பகுப்பாய்வு மற்றும் கிராமம் முதல் தேசிய அளவில் கண்காணிப்பு கட்டுப்பாட்டகங்ளை வழங்குகிறது.
- பயனாளிகளைக் கண்டறிதல் மற்றும் சென்றடைதலை சாத்தியமாக்குவதன் மூலம் 'லட்சாதிபதி தீதி' முன்னெடுப்பிற்கு LokOS ஆதரவளிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் LokOS-இன் கீழ் தொடங்கப்பட்ட 'SHE-LEAPS' என்பது, சுயஉதவிக் குழுக்கள் மூலம் ஊரகப் பெண்களின் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான ஒரு டிஜிட்டல் தளமாகும்.





# சர்வதேசச் செய்திகள்

## உலக வங்கியின் வருவாய் வகைப்பாடு 2026


- 2025 ஆம் ஆண்டிற்கான தனிநபர் மொத்த தேசிய வருமான (GNI) தரவுகளின் அடிப்படையில் 2026-27 ஆம் ஆண்டிற்கான நாடுகளின் வருவாய் வகைப்பாட்டை உலக வங்கி குழுமம் (WBG) வெளியிட்டுள்ளது.
- உலக வங்கியானது நாடுகளை குறைந்த வருவாய், குறைந்த நடுத்தர வருவாய், உயர் நடுத்தர வருவாய் மற்றும் அதிக வருவாய் என நான்கு பிரிவுகளாக வகைப் படுத்துகிறது.

- இந்தியா 1,176 முதல் 4,635 அமெரிக்க டாலர் வரையிலான தனிநபர் மொத்த தேசிய வருமானத்துடன் (GNI) குறைந்த நடுத்தர வருவாய் பிரிவில் தொடர்ந்து நீடிக்கிறது.
- இந்த வகைப்பாடானது அட்லஸ் முறையைப் பயன்படுத்துவதுடன் இது குறுகிய கால நாணய ஏற்ற இறக்கங்களைக் குறைக்க மாற்று விகிதங்களின் மூன்றாண்டு நகரும் சராசரியைப் பயன்படுத்துகிறது.
- ஜோர்டான், மைக்ரோனேசியா, பிலிப்பைன்ஸ், இலங்கை, வியட்நாம் மற்றும் டோகோ உள்ளிட்ட ஆறு நாடுகள் அதிக வருவாய் பிரிவுகளுக்கு முன்னேறியுள்ளன.
- குறைந்த வருவாய் கொண்ட பொருளாதார நாடுகளின் பங்கு 2026 ஆம் ஆண்டில் 30 சதவீதத்தில் இருந்து 11 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன் இது சலுகை நிதி மற்றும் மேம்பாட்டு உதவிகளைப் பெறுவதைப் பாதிக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பின்ன ஃபெர்மி கடல்




- இன்ஸ்ப்ரூக் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் 'பின்ன ஃபெர்மி கடல்' எனப்படும்

புதிய ஈர்க்கக் கூடிய குவாண்டம் பருப்பொருள் நிலையை உருவாக்கியுள்ளனர்.

- இச்சோதனையில் சில நானோகெல்வின் அளவிற்கு குளிரூட்டப்பட்ட சுமார் 70,000 சீசியம் அணுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் துகள்களின் இயக்கத்தைக் கட்டுப் படுத்த அவை ஒரு பரிமாணக் குழாய்களில் அடைக்கப்பட்டன.
- பின்ன ஃபெர்மி கடல் என்பது மிகக் குறைந்த வெப்பநிலையில் உருவாகும் ஒரு குவாண்டம் நிலையாகும், அங்கு துகள்கள் அசாதாரண கூட்டு நடத்தை முறையை வெளிப்படுத்துகின்றன.
- இக்கண்டுபிடிப்பானது, ஒரு பரிமாணத்தில் துகள்களின் ஊடாடல்களை விவரிக்கும் தோமோநாகா-லுட்டிங்கர் திரவக் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்ட குவாண்டம் நடத்தையை ஆராய்கிறது.
- இச்சோதனையில் பயன்படுத்தப்படும் சீசியம் (Cs) என்பது அணு எண் 55 ஐக் கொண்ட ஒரு கார உலோகமாகும்.

## SOLVE தரைவழிச் சோதனை – ககன்யான்





- ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் (SDSC) SOLVE (சோதனைகளுக்கான துணை-சுற்றுப்பாதை ஏவுதல் வாகனம்) திட மின்னியற்றியை இஸ்ரோ வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ககன்யான் திட்டத்தின் குழு தொகுதிக்கான, பாராசூட் அடிப்படையிலான வேகக் குறைப்பு அமைப்பைச் சரிபார்க்கும் ஒரு சோதனைத் தளமாக SOLVE உருவாக்கப்பட்டு வருகிறது.
- SOLVE-இல் பயன்படுத்தப்படும் திட மின்னியற்றியானது, துருவ செயற்கைக்கோள் ஏவுதல் வாகனத்தின் (PSLV) 'ஸ்ட்ராப்-ஆன்' (strap-on) மின்னியற்றியில் இருந்து சில மாற்றங்களுடன் பெறப்பட்டது.
- ககன்யான் என்பது இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத் திட்டமாகும், இது மூன்று விண்வெளி வீரர்களை 400 கி.மீ தாழ் புவி சுற்றுப்பாதைக்கு (LEO) மூன்று

நாட்களுக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இத்திட்டத்தில் மனிதப் பயணத்திற்கு உகந்த LVM3 (HLVM3), குழு தப்பிக்கும் அமைப்பு (CES), சுற்றுப்பாதை தொகுதி (OM), குழு தொகுதி (CM) மற்றும் சேவை தொகுதி (SM) ஆகியவை அடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## விலங்கு மற்றும் தாவரக் கண்டுபிடிப்புகள் 2025




- கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய விலங்கியல் ஆய்வகத்தின் (ZSI) 111-வது நிறுவன தினத்தின் போது விலங்கு கண்டுபிடிப்புகள்-2025 மற்றும் தாவர கண்டுபிடிப்புகள் - 2025 ஆகிய அறிக்கைகள் வெளியிடப்பட்டன.
- விலங்கு கண்டுபிடிப்புகள்-2025 அறிக்கையானது, 483 புதிய சிற்றினங்கள் மற்றும் இந்தியாவில் முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்ட 226 சிற்றினங்கள் உட்பட இந்தியாவின் விலங்கினங்களில் 709 புதிய சேர்ப்புகளைப் பதிவு செய்துள்ளதுடன் இதன் மூலம் மொத்த விலங்கினப் பல்லுயிரியம் 105,953 சிற்றினங்களாக உயர்ந்து உள்ளது.
- தாவர கண்டுபிடிப்புகள்-2025 அறிக்கையானது, அறிவியலுக்குப் புதிய 221 வகைப்பாடுகள் (taxa) மற்றும் இந்தியாவுக்கான 132 புதிய பரவல் பதிவுகள் உட்பட இந்தியாவின் தாவர இனங்களில் 353 புதிய சேர்ப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- கேரளாவில் அதிக அளவிலான புதிய விலங்கு கண்டுபிடிப்புகள் (98) பதிவாகியுள்ளன, அதே நேரத்தில் அருணாச்சலப் பிரதேசத்தில் அதிக அளவிலான புதிய தாவர கண்டுபிடிப்புகள் (49) பதிவாகியுள்ளன.
- இந்தியாவின் பல்லுயிரியத்தை ஆவணப்படுத்துவதற்காக விலங்கினங்களுக்கான அறிக்கையை இந்திய விலங்கியல் ஆய்வகமும் (ZSI), தாவரங்களுக்கான அறிக்கையை இந்திய தாவரவியல் ஆய்வகமும் (BSI) ஆண்டுதோறும் வெளியிடுகின்றன.

## பல்லுயிர் பாரம்பரியத் தளம் - போர்ஜூலி ஈரநிலம்

- ஒரைசா ருஃபிபோகன் என்ற காட்டு நெல் வகையைப் பாதுகாப்பதற்காக, அஸ்ஸாமில் உள்ள போர்ஜூலி ஈரநிலம் அதிகாரப்பூர்வமாக பல்லுயிர் பாரம்பரியத் தளமாக (BHS) அறிவிக்கப்பட்டுள்ளது.

- சோனித்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த ஈரநிலமானது, பயிரிடப்படும் நெல்லின் (ஒரைசா சடைவா) காட்டு மூதாதையினத்தைப் பாதுகாக்கும் ஒரு முக்கியமான நன்னீர் சதுப்பு நிலமாகும்.
- ஒரைசா ருஃபிபோகன் இயற்கையாகவே பல பூச்சிகள், நோய்கள், வெள்ளம் மற்றும் உவர்ப்புத்தன்மை போன்ற நிலைகளை எதிர்க்கும் தன்மை கொண்டுள்ளதுடன் இது பருவநிலையைத் தாங்கி வளரும் நெல் வகைகளை உருவாக்குவதில் மதிப்புமிக்கதாக அமைகிறது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை-தேசிய தாவர மரபணு வளப் பணியகம் (ICAR-NBPGR) மற்றும் அஸ்ஸாம் மாநில பல்லுயிர் வாரியத்தின் ஆதரவுடன் இந்தத் தளம் அதன் இயற்கை வாழிடத்திலேயே பாதுகாக்கப்படுகிறது.
- தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகள், அரிய சிற்றினங்கள் மற்றும் முக்கியமான மரபணு வளங்களைப் பாதுகாப்பதற்காக, 2002 ஆம் ஆண்டு உயிரியல் பன்முகத் தன்மைச் சட்டத்தின் 37வது பிரிவின் கீழ் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளங்கள் (BHS) அறிவிக்கப் படுகின்றன.




# மாநிலச் செய்திகள்

## மேற்கு வங்கம் - புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள்




- மேற்கு வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பாரம்பரியப் பொருட்கள் புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளன.
- புவிசார் குறியீடு பெற்ற அப்பொருட்கள் சந்தன்நகரின் ஜல்பாரா சந்தேஷ், ஜனாய்

நகரின் மனோஹரா மற்றும் பாலாகரின் பாரம்பரிய மரப்படகுகள் (டிங்கி) ஆகியவை ஆகும்.

- ஜல்பாரா சந்தேஷ் மற்றும் ஜனாயின் மனோஹரா ஆகியவை தங்களது தனித்துவமான தயாரிப்பு முறைகளுக்குப் பெயர் பெற்ற பாரம்பரிய வங்காள இனிப்புகளாகும்.
- பாலாகரின் டிங்கிப் படகுகள் அப்பகுதியின் பாரம்பரிய மரப் படகு தயாரிக்கும் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தீஜன் பாய் மறைவு




- மகாபாரதத்தின் இசை விவரிப்பை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய சத்தீஸ்கர் நாட்டுப்புறக் கலை வடிவமான பாண்டவானியின் புகழ்பெற்ற கலைஞரான தீஜன் பாய் சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் தனது 70 வயதில் காலமானார்.
- தீஜன் பாய் 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று சத்தீஸ்கரின் துர்க் மாவட்டத்தில் உள்ள கணியாரி கிராமத்தில் பிறந்த அவர் தனது தாய்வழி தாத்தாவான பிரஜ்லால் பர்தாவிடம் பாண்டவானியின் ஆரம்ப கால பயிற்சியைப் பெற்றார்.
- பாரம்பரியமாக அமர்ந்தவாறு நிகழ்த்தப்படும் வேதமதி பாணியைப் போலல்லாமல், நின்று கொண்டு, நடிப்பு, வசனம், பாவனைகள் மற்றும் பாடலுடன் நிகழ்த்தும் பாண்டவானியின் காபாலிகா பாணியை அவர் பிரபலப்படுத்தினார்.
- பத்மஸ்ரீ (1988), பத்ம பூஷன் (2003) மற்றும் பத்ம விபூஷன் (2019) உள்ளிட்ட இந்தியாவின் முக்கிய குடிமக்கள் விருதுகளை அவர் பெற்றுள்ளார்.
- சத்தீஸ்கரின் பாரம்பரிய நாட்டுப்புற நாடக மற்றும் இசையுடன் கூடிய கதை சொல்லல் வடிவமான பாண்டவானி தம்புரா (நரம்பு வாத்தியம்) போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இந்திய இதிகாசமான மகாபாரதத்தின் நிகழ்வுகளை விவரிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★